claves para lograr una atención aceptable eran: la comprensión mutua, el tratamiento de las necesidades complejas, la discusión del trauma y la competencia cultural. Cada concepto fue habilitado, o impedido, por un conjunto de temas relacionados. Los resultados revelaron que si bien la asistencia práctica y advocacy son importantes para los refugiados, estos aspectos de la atención deben permanecer enraizados en los procesos terapéuticos de comprensión mutua, continuidad narrativa y auto-empoderamiento a través de la autoeficacia. Además, todavía se necesita una investigación más rigurosa desde el punto de vista ético en el marco de esta área crítica.

**Palabras clave:** experiencia del refugiado, servicios psicosociales para refugiados, atención terapéutica

---

**Formación de consejeros en países de bajo y mediano ingreso en terapias de sesión única: ayuda a profesionales que ofrecen apoyo psicosocial y de salud mental para la superación de sentimientos de impotencia**

***Guus van der Veer***

El presente artículo describe un enfoque para la formación de profesionales que ofrecen apoyo psicosocial y de salud mental en áreas de post catástrofes y áreas de conflicto armado en consejerías de sesión única, también conocidas como Terapias de Sesión Única. Este informe de terreno también suministra información adicional a la ya brindada en publicaciones anteriores sobre los criterios para la practica de Terapias de Sesión Única. La formación que se describe en este documento ofrece a los participantes un enfoque sistemático, así como una explicación teórica de la interdependencia de tres actividades esenciales para profesionales que brinden Terapias de Sesión Única: ofrecer reconocimiento, psicoeducación y replanteamiento. La Terapia de Sesión Única no solo brinda apoyo a los profesionales que ofrecen apoyo psicosocial y de salud mental, sino que también puede ser efectiva en la reactivación del desarrollo de las personas que se han quedado estancadas en sus problemas. La práctica del este enfoque también contribuye a que los profesionales saquen el mejor provecho de las situaciones difíciles y les permita continuar aun cuando se encuentren presentes sentimientos de impotencia. De esa manera el proporcionar formación en Terapia de Sesión Única puede también funcionar como una manera de cuidado para el personal de trabajo.

**Palabras Clave:** psicoeducación, replanteamiento, reconocimientos, consejería de sesión única, Terapia de Sesión Única, cuidado de personal

---

**Reflexiones personales**

**Transformar un hospital psiquiátrico desactualizado en un espacio amigable para el paciente: un tema de tomar riesgos**

***Mahesan Ganesan***

El autor describe su experiencia como psiquiatra en un gran hospital psiquiátrico cerca de Colombo, la capital de Sri Lanka. Mientras estaba allí, intentó transformar las salas bajo su supervisión en espacios amigables para los pacientes a través del empoderamiento tanto de los pacientes como de los miembros del personal de trabajo. Esta reflexión muestra que a veces puede ser sabio no tener un plan, sino hacer uso de las oportunidades a medida que surgen.

**Palabras clave:** conflicto, salud mental, servicios amigables al paciente, psiquiatría, reforma, Sri Lanka

# Summaries in Tamil

**Current affairs**

**Field report**

நிகழ்கால விவகாரங்கள்

கள அறிக்கை

நீதி கிடைத்தலை உறுதிப்படுத்துவதற்காக தப்பிப்பிழைத்தவர்களை மனநலன்மற்றும் உளசமூக ஆதரவு லென்ஸினூடாக ஆதரவழித்தல்: நேபாளத்தில் சிறுவர் பராமரிப்பு விடுதியில் பாலியல்வன்புணர்வு மற்றும் துஸ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்பட்ட பெண்பிள்ளைகள்பற்றிய சம்பவக் கற்கை

***Bhushan Guragain & Lajina Ghimire***



Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.

நேபாளத்திலிருந்தான கள அறிக்கையானது பாலியல் வன்முறை மற்றும் துஸ்பிரயோகளிலிருந்து தப்பிப்பிழைத்தவர்களுக்கான நீதி கிடைத்தலை உறுதிப்படுத்த மனநல மற்றும் உளசமூக ஆதரவினது முக்கியத்துவத்தினை குறிப்பிட்டுக்காட்டுகின்றது. அறிக்கையானது, உளசமூக ஆதரவானது எவ்வாறு பாலியல் வன்முறை முறைப்பாட்டு விகிதங்களைக் குறைத்து குற்றவாளிகளுக்கான தண்டனை விகிதங்களைக் கூட்ட உதவலாம் என்பதனை எடுத்துக்காட்டுகின்றது. சித்திரவதையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிலையமானது 150 இற்கு மேற்பட்ட சித்திரவதை,வன்முறைகள், பாலியல் வன்புணர்வு என்பனவற்றினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி மன்றங்களில் நீதி கிடைத்தலை மனநலன் மற்றும் உளசமூக ஆதரவினை மையமாகக் கொண்ட ஒரு பூரணமான அணுகுமுறையினூடாக ஆதரவளித்தது. நிறுவனமானது தற்பொழுது ஏப்பிரல் மாதம் 25ம் திகதி 2015 இல் பூமியதிர்ச்சியின் பின் பாலியல் துஸ்பிரயோகத்திற்குள்ளான நான்கு சிறுவர்களின் சம்பவங்களை இந்த அணுகுமுறையினைக் கொண்டு கையாண்டு வருகின்றார்கள். வன்முறைக்குள்ளாகி தப்பிப்பிழைத்தவர்களுக்கு நீதி கொடுத்தலில் உள்ள சவால்கள் அப்படியேதான் உள்ளன, ஆயினும் இந்த சம்பவக் கற்கையில் குறிப்பிட்டவாறு உளசமூக ஆதரவு மற்றும் மனநல லென்சினூடான ஆதரவானது சவால்களைக் குறைக்க உதவும் என்பதனை குறிப்பிடுகின்றது

**முக்கிய சொற்பதங்கள்:** நேபாளம், பாலியல் வன்முறை, நீதித்துறை ஆதரவு

---

**வடக்கு உகண்டாவிலுள்ள தெற்கு சூடான் அகதிகளின் குடியிருப்புகளில் பால்நிலைசார் வன்முறை விடயங்களுக்கு முகம்கொடுத்தலும் உளசமூக ஆதரவும்**

*Rose Mogga*

இந்த சுய பிரதிபலிப்பானது அரசசார்பற்ற நிறுவனமான TOP உகண்டா யும்பே மாவட்டதிலுள்ள பிடிபிடியிலும் அட்சுமானி மாவட்டதிலுமுள்ள அகதி முகாம்களில் பால்நிலைசார் வன்முறைகளுக்கு முகம்கொடுத்து தப்பிப்பிழைத்தவர்களுக்கான ஏலவேயுள்ள உளசமூக ஆதரவுத் திட்டத்தினை புதிதாக வந்த ஏராளமான சூடான் அகதிகளுக்கு எவ்வாறு பரந்து செய்ய முயற்சித்தது என்பதனை விபரிக்கின்றது. அத்துடன் இந்தக் கட்டுரையானது ஊழியர்கள் மனவடு இடையீட்டிற்காக எவ்வாறு பால்நிலைசார் (பாலியல்) வன்முறைகளுக்கு முகம்கொடுத்த பெண்களை அடையாளப்படுத்தி புலனுணர்வு சார் நடத்தை சிகிச்கையூடாக எவ்வாறு ஆதரவினை வழங்கினார்கள் என்பதனையும் விபரிக்கின்றது. கட்டுரையாளர் இந்த இடையீட்டினூடாக சென்ற பெண்களுக்காக குரல் கொடுப்பதுடன் 200000 மேற்பட்ட அகதிகளை மீள்குடியேற்றலில் ஊழியர்கள் அனுபவித்த சவால்களிற்கும் குரல் கொடுக்கின்றார்.

**முக்கிய சொற்பதங்கள்:** புலனுணர்வு சார்ந்த நடத்தை சிகிச்சை, அகதிகள், பால்நிலைசார் பாலியல் வன்முறை, தெற்கு சூடான், உகண்டா

---

## Articles

**உலக மனநல சுகாதார நிபுணத்துவர்களுக்கான நெறிமுறைகள்**

*Elena Cherepanov*

உலக மனநலப் பணியானது ஒரு சிறப்புப் பகுதியாக உருவெடுத்து வருவதுடன் உலகிலுள்ள பல்கலாச்சார சனத்தொகைக்கு சேவை வழங்குவதனை நோக்குக்கின்றது. சர்வதேச மனநல சேவை வழங்குனர்கள் பொதுவாக சிக்கலான தேவைகள் உள்ள இடங்களில் பணியாற்ற நேரிடுவதுடன், பாரிய மனவடு, மனித அவலங்களுக்கு முகம்கொடுக்க நேரிடுகின்றார்கள். இது அனேக சந்தர்ப்பங்களில் இந்த இடங்கள் சுயாதீனமான, பொறுப்பான, சிறப்பான மற்றும் நெறிமுறையான முடிவுகள் எடுக்கவேண்டிய தேவையினை முன்வைக்கின்றன. மனிதகுலத்தின் புரிந்துகொள்ளமுடியாத தோல்வி, நம்பமுடியாத பின்னடைவு போன்ற இரண்டு நிலைப்பாடுகளுக்கு முகம்கொடுக்கும் நிலை தொழில் நிபுணத்துவர்களை தங்களது நம்பிக்கைகளை மீள் பரிசீலனை செய்ய அழுத்துகின்றது. இது, அவர்களுக்கு தங்களது தொழில், மற்றும் தங்கள் பற்றிய கண்டுபிடிப்புகளுக்கும் உலக இருத்தலியல் பற்றிய கண்டுபிடிப்புக்களுக்குமான ஒரு சந்தர்ப்பத்தினை திறக்கின்றது. இந்தப்பதிவானது உளசமூக இடையீடுகளுக்கான மனிதநேயக் கொள்கைகள் மற்றும் உத்தி வழிமுறைகள் கருப்பொருள் சட்டவரைபு மற்றும் செயல் வழிமுறைகளை மனநல நிபுணத்துவர்களுக்கு வழக்கி அவர்கள் நெறிமுறை, விழுமிய நிலைப்பாடுகளிக்கிடையில் மனிதநேயத் தேவைகள் மற்றும் உளசமூகத் தேவைகளுக்கு முகம்கொடுக்க நகர்ந்தசெல்ல வழங்குகின்றது என விவாதிக்கின்றது. அத்துடன் இதனை விழுமிய, தொழில்வாண்மை மற்றும் இணைந்த முறையில் வழங்க உதவுகின்றது எனவும் விவாதிக்கின்றது. மேலும், இலகுவில் பாதிக்கப்படக்கூடிய மக்களுடன் பணியாற்றுதல பொழுது உச்ச தரமுடைய சுய விழிப்பு மற்றும் சுய பராமரிப்பு என்பனவற்றுக்கான கேள்வி கூடுகின்றது ( வில்லியம் 2012) .மேலும் இது தொழில்வாண்மைக்கான பணிக்களைப்படையும் நிலை பாதுகாப்பு என்பனவற்றையும் கொண்டதாக இருத்தல் வேண்டும்

**முக்கிய சொற்பதங்கள்:** பணிகளினால் மிகக் களைப்படைதல், நெறிமுறைகள், உலக மனநல சுகாதாரம், மனிதநேய விழுமியங்கள், மனவடு, மனவடு சுற்றுலா

---

**சிரியா: மீள்குடியேற்றதின் பின்னான நிலையில் இடம்பெயர்ந்த அகதிப் பெற்றோர் தங்களது பிள்ளைகளின் பராமரிப்பில் பாவித்த சமாளிக்கும் பொறிமுறைகள்**

*Aala El-Khani, Fiona Ulph, Sarah Peters & Rachel Calam*

அகதிகளில் உளவியல் நெருக்கீடுகள், மற்றும் மனநலப் பிரச்சனைகளின் அதிகரித்த ஆபத்தினை சாட்சியங்கள் எடுத்துக்காட்டுகின்றன. இது இவ்வாறு இருப்பினும், அகதிகள் தொடர்ந்து அன்றாட நடவடிக்கைகளில் ஈடுபடுதல், நிலைபாடுகளில் இருந்து மீண்டு அர்த்தமுள்ள, திறன்வாய்ந்த வாழ்க்கையினை வாழக்கூடிய இயலுமைகளை வெளிப்படுத்திக்கொண்டுதான் உள்ளனர். பெற்றாருடைய மனநலன் மற்றும் சமாளிக்கும் திறன்களின் பாணி என்பன அவர்களுடைய பிள்ளைகளின் மனநலன் மற்றும் நன்னிலையிற்கு முக்கியமானவையாகும். இடம்பெயர்ந்த சிரிய அகதிகள் பிள்ளைகளைப் பராமரிக்க பாவித்த சமாளிக்கும் பொறிமுறைகள்பற்றி ஆராய்வதே இந்தக் கற்கையின் நோக்கமாகக் காணப்பட்டது. நேர்முகங்களிலும் மையப்படுத்தப்பட்ட குழுக் கலந்துரையாடல்களிலும் 27 தயாய்மாரும் துருக்கியிலும் சிரியாவிலுமுள்ள அகதிமுகாம்களிலும் மனிதநேய நிலைப்பாடுகளிலும் வாழ்கின்ற இரண்டு நிபுணத்துவ மனிதநேயப் பணியாளர்களும் பங்குபற்றினர். தரவுகள் கருப்பொருள்ரீதியான ஆய்வினைப் பாவித்து பகுப்பாயப்பட்டன. தரவுகள் 3 கருப்பொருள்களுக்கு கீழ் வகுக்கப்பட்டன- புதிய நியமங்களுக்கு



Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.

இசைவாக்கமடைதல், உதாரணமாக ஏற்றுக்கொள்ளல், இயல்புநிலையடைதல், மற்றும் நன்றியறிதல், ஆதரவினைத் தேடுதல- உதாரணமாக பிரச்சனையைத் தீர்த்தலுக்கு உதவியை நாடுதல், ஆதரவினை நாடுதல் போன்றன, நம்பிக்கையினைப் பாவித்து துன்பங்களைத் துடைத்தல், பெற்றோர் நலனை ஊக்குவித்தல் போன்றவற்றினூடாக மனரீதியாக உறுதியாக இருத்தல். மீள்குடியேற்றத்தின்பின்னான நிலைப்பாடுகளில் சிரிய அகதிகளில் சமாளிக்கும் திறன்களுடன் தொடர்புபட்ட எண்ணிக்கையான கருப்பொருட்கள் இனங்காணப்பட்டன. இவ்வாறான நிலைப்பாடுகளில் கலாச்சாரரீதியாக பொருத்தமான உளசமூக இடையீடுகளை முன்னேற்ற இந்த கருப்பொருட்கள் மொழிபெயர்க்கப்படலாம்

**முக்கிய சொற்பதங்கள்:** இடையீடுகள், பெற்றோர், அகதி முகாம்கள்

---

**ஆகதி மற்றும் ஊழியர்களின் உளத் தெரபி சேவைகளின் அனுபவம்: ஒரு தரரீதியான நெறிப்படுத்தப்பட்ட மீளாய்வு**

***Aspasia Karageorge, Paul Rhodes, Rebecca Gray & Renos Papadopoulos***

அகதிகளுக்கான உளத் தெரபி சேவைகளுக்கான தேவைகள் சரியாக ஆவணப்படுத்தப்பட்டிருப்பினும், அகதி மற்றும் ஊழியர் பார்வையில் இந்த அணுகுமுறைகளுக்கான அங்கீகாரம், மற்றும் கணிப்பு என்பனபற்றி மிகக் குறைவாகவே தெரியவந்துள்ளது. தற்போதுள்ள அணுகுமுறைகள் பற்றியும் அவற்றின் நெறிமுறை மற்றும் சிகிச்சைமுறை பற்றியும் பாவனையாளர்களின் அனுபவங்கள்பற்றிய தரரீதியான கற்கைகளின் விமர்சனரீதியான பார்வையினைத் தருகின்றன. அதனால், thematic synthesis மற்றும் meta-ethnographic அணுகுமுறைகள் இணைந்ததான நெறிப்படுத்தப்பட்ட பயனாளி மற்றும் ஊழியர்களின் உளதெரபி அனுபவங்கள் பற்றிய மீளாய்வு அளிக்கை செய்யப்பட்டது (n = 11).

ஏற்றுக்கொள்ளப்பட்ட பராமரிப்பினை அடைவதற்கான விடயங்கள்: பரஸ்பர புரிந்துணர்வு, சிக்கலான தேவைகளை கவனத்திலெடுத்தல், மனவடு மற்றும் கலாச்சார திறன்களைக் கலந்துரையாடல். ஒவ்வொரு விடயமும் அதனுடன் தொடர்புடைய விடயங்களினால் மெருகூட்டப்படுகின்றன அல்லது குறைக்கப்படுகின்றன. மேலும் இந்த சிக்கலான விடயத்திற்கு இன்னும் அனேக நெறிப்படுத்தப்பட்ட ஆய்வுகள் தேவைப்படுகின்றன.

**முக்கிய சொற்பதங்கள்:** அகதி அனுபவம், அகதிகளுக்கான உளசமூக சேவைகள், தெரிமுறையிலான பராமரிப்பு

---

**குறைந்த மற்றும் நடுநிலை வருமானமுள்ள நாடுகளிலுள்ள உளவளத்துணையாளர்களை ஒரு அமர்வு உளவளத்துணையில் பயிற்றுவித்தல்: சக்தியற்ற நிலைப்பாட்டின் உணர்வுகளைப் புரிந்துகொள்ள உளசமூகப் பணியாளர்களுக்கு உதவுதல்**

***Guus van der Veer***

இந்தக் கட்டுரை அனர்த்தத்தின் பின்னான பிரதேசங்களிலும், ஆயுத முரண்பாட்டுப் பிரதேசங்களிலும் மனநலன் மற்றும் உளசமூகப் பணியாளர்களை ஒரு அமர்வு தெரபி எனவும் அழைக்கப்படும் ஒரு அமர்வு உளவளத்துணையில் பயிற்றுவித்தலுக்கான அணுகுமுறையினை விபரிக்கின்றது. அத்துடன் இந்தக் கள அறிக்கை ஒரு அமர்வு உளவளத்துணையினை செயற்படுத்துவதற்கான காரணங்களை விபரிக்கும் ஏலவேயுள்ள பதிப்புகளிலுள்ள தகவல்களையும் சேர்த்துள்ளது. பயிற்சி பங்குபற்றுனர்களுக்கு ஒரு முறையான அணுகுமுறையினையும், ஒரு அமர்வு உளவளத்துணை உளவளத்துணையாளரின் முன்று முக்கிய செயற்பாடுகளான அங்கீகாரத்தினைக் கொடுத்தல், உளக் கற்கையினை வழங்கல், வேறுபார்வையில் பிரச்சினையைப் பார்த்தல் (offering recognition, psycho-education and reframing) என்பவற்றிற்கிடையிலான ஒன்றுடனொன்று தங்கியிருத்தல் நிலையின் கோட்பாட்டு விளக்கத்தினையும் விபரிக்கின்றது. ஒரு அமர்வு உளவளத்துணையானது மனநல மற்றும் உளவளத்துணையாளர்களுக்கு மட்டும் பிரியோசனமானதல்ல, தங்களுடைய சொந்தப் பிரச்சனைகளில் மூழ்கிப் போயுள்ளவர்களுக்கு மீண்டும் அபிவிருத்தியினை ஏற்படுத்தவும் உதவும். இந்த அணுகுமுறையினைப் பயிற்சித்தல் பணியாளர்களுக்கு ஆற்றொண்ணா நிலைகளில் தங்களால் சிறந்ததைச் செய்யவும், நம்பிக்கையற்ற நிலைகளினால் சூழப்பட்டபொழுதுகளில் தொடர்ந்து செயல்படவும் ஊக்குவிக்கின்றது. ஆகையால் ஒரு அமர்வு உளவளத்துணையில் பயிற்றுவித்தல் ஒரு சுய பராமரிப்பாகவும் செயல்படும்

**முக்கிய சொற்பதங்கள்:** உளக்கற்கை, அங்கீகாரத்தினை வேறுபார்வையில் பார்த்தல், ஒரு அமர்வு உளவளத்துணை, ஒரு அமர்வு தெரபி, சுய பாராமரிப்பு

---

## Personal reflections

**சுய பிரதிபலிப்புக்கள்**

**காலாவதியான மனநோயியல் மருத்துவமனையினை நோயாளர்நேய இடமாக நிலைமாற்றுதல்: சவால்களை துணிந்து எடுத்தல்**

***Mahesan Ganesan***

எழுத்தாளர் இலங்கையின் தலைநகரான கொழும்பிற்கண்மையில் உள்ள மனநோயியல் வைத்தியசாலையில் மனநோயியல் மருத்துவராக தனது அனுபவத்தினை விபரிக்கின்றார். அங்கு பணியாற்றும்பொழுது அவரின் மேற்பார்வைக்கு கீழுள்ள நோயாளர் விடுதிகளை நோயாளர் நேய விடுதிகளாக மாற்ற நோயாளர்களையும் ஊழியர்களையும் வலுவூட்டுவதனூடாக முயற்சியெடுத்ததார். இந்த சுய பிரதிபலிப்பானது சில சமயங்களில் ஒரு திட்டத்தினை வைத்திருக்காமல் விடுவது புத்திசாலித்தனமானது, மாறாக சந்தர்ப்பங்கள் எழும்பொழுது அதனைப் பாவித்தல் நன்று என்பதனை எடுத்தியம்புகின்றது

**முக்கிய சொற்பதங்கள்:** வன்முறை, மனநலன், நோயாளர்நேய சேவைகள், மனநோயியல், சீர்திருத்தங்கள், இலங்கை



Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.